# திருநெல்வேலி மாநகராட்சி

## 24.08.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

1. இம்மாநகராட்சியில், திருநெல்வேலி மண்டலம் புதிய வார்டு எண்.20ல் உள்ள எம்.என்.பி. சன்னதி தெருவில் உள்ள மாநகராட்சி ராணி அண்ணா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், பள்ளிக் குழந்தைகளின் நலன்கருதி மேற்படி பள்ளியில் இரண்டாவது தளத்தில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.91.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, திருநெல்வேலி மண்டலம் புதிய வார்டு எண். 20ல் உள்ள எம்.என்.பி. சன்னதி தெருவில் உள்ள மாநகராட்சி ராணி அண்ணா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், பள்ளிக் குழந்தைகளின் நலன்கருதி மேற்படி பள்ளியில் இரண்டாவது தளத்தில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.91.70 இலட்சத்திற்கும், மேற்படி தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(மதிப்பீடு எண்.97/2022-23)

**தீர்மானம் எண்: 91 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

2. இம்மாநகராட்சியில், திருநெல்வேலி மண்டலம் புதிய வார்டு எண்.22 மலையாளமேடு பகுதியில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், அருகில் உள்ள சமுதாயக் கூடத்தில் பள்ளி மாணவர்கள் கல்வி பயின்று வருவதால், பள்ளி மாணவர்களின் நலன் கருதி மலையாளமேடு தொடக்கப்பபள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் இரண்டு எண்ணங்கள் கட்டுவதற்கு ரூ.26.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, திருநெல்வேலி மண்டலம் புதிய வார்டு எண்.22 மலையாளமேடு பகுதியில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், பள்ளி மாணவர்களின் நலன்கருதி கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு

ரூ.26.90 இலட்சத்திற்கும், மேற்படி தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(மதிப்பீடு எண்.95/2022-23)

**தீர்மானம் எண்: 92 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

3. திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் புதிய வார்டு எண்.12 உடையார்பட்டி சாலை தெரு ஸ்ரீ ரெங்கநாதபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள இரண்டு பழைய வகுப்பறை கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் கழிப்பறை கட்டிடங்கள் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.54.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, தச்சநல்லூர் மண்டலம் புதிய வார்டு எண்.12 உடையார்பட்டி சாலை தெரு ஸ்ரீ ரெங்கநாதபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள இரண்டு பழைய வகுப்பறை கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் கழிப்பறை கட்டிடங்கள் அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.54.50 இலட்சத்திற்கும், மேற்படி தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(மதிப்பீடு எண்.102/2022-23)

**தீர்மானம் எண்: 93 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4. இம்மாநகராட்சியில், தச்சநல்லூர் மண்டலம் புதிய வார்டு எண்.29 சி.என். கிராமம் அறிஞர் அண்ணா தொடக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல், சிறுநீர் கழிப்பிட வசதி செய்தல், சிசிடிவி கேமரா வசதி மற்றும் மேற்படி பள்ளியில் மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.23.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டவாறு, தச்சநல்லூர் மண்டலம் புதிய வார்டு எண்.29 சி.என். கிராமம் அறிஞர் அண்ணா தொடக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் அமைத்தல், சிறுநீர் கழிப்பிட வசதி செய்தல், சிசிடிவி கேமரா வசதி மற்றும் மேற்படி பள்ளியில் மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட

மதிப்பீடு ரூ.23.90 இலட்சத்திற்கும், மேற்படி தொகையினை மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(மதிப்பீடு எண்.97/2022-23)

**தீர்மானம் எண்: 94அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

5. திருநெல்வேலி மாநகராட்சியில் கல்வி நிதி கீழ் கீழே பட்டியில் குறிப்பிட்டுள்ள மேலப்பாளையம், தச்சநல்லூர், திருநெல்வேலி மண்டத்தில் அமைந்துள்ள பள்ளி கட்டிடங்களின் நேரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மண்டலம் | வார்டு எண் | பள்ளியின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 27 | கல்லனை உயர்நிலைப் பள்ளி (6 - ம் வகுப்பு முதல் 8 - ம் வரை) | தரைதளம் கழிப்பிடம் கட்டும் பணி | 8.35 |
| | | | | தரைதளம் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி | 6.70 |
| 2 | திருநெல்வேலி | 18 | காமராஜர் உயர்நிலைப் பள்ளி | காம்பவுண்ட் சுவர் கட்டும் பணி, வகுப்பறை ஜன்னல்,மாற்று தண்ணீர் மோட்டார் , குடிநீர் தொட்டி உயர்த்தி கட்டும் பணி, மாற்று டைல்ஸ் பதிக்கும் பணி | 3.50 |
| 3 | திருநெல்வேலி | 20 | சிவன் கோவில் ஆரம்ப பள்ளி | ஏற்கனவே உள்ள ஜி.ஐ. ஷீட் சிறுநீர் கழிப்பிடத்தை அகற்றி புதிய சமையலறை கட்டும் பணி | 9.05 |
| 4 | திருநெல்வேலி | 19 | ரகுமான் பேட்டை நடுநிலைப் பள்ளி | ஏற்கனவே உள்ள சமையலறை இடித்து புதிய சமையலறை கட்டும் பணி , பேவர் பதிக்கும் பணி, சிறுநீர் கழிப்பிடத்திற்கு ஜி.ஐ. ஷீட் அமைக்கும் பணி, முதல் தளம் கூரையினை இடித்து , ஜி.ஐ. ஷீட் அமைக்கும் பணி | 19.85 |
| 5 | தச்சநல்லூர் | 28 | பாரதியார் உயர்நிலைப் | புதிய போர் அமைக்கும் | 16.30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பள்ளி | பணி, வகுப்பறை அறைகள் மற்றும் கழிவறை பராமரிக்கும் பணி | |
| 6 | தச்சநல்லூர் | 29 | மீனாட்சிபுரம் உயர்நிலைப் பள்ளி | கட்டிடத்திற்கு முன்பு தளம் அமைக்கும் பணி, வகுப்பறை மற்றும் ஆசிரியர்கள் அறையில் மறு வயரிங் மேற்கொள்ளும் பணி | 8.70 |
| 7 | தச்சநல்லூர் | 29 | எம்.வி புரம் ஆரம்ப பள்ளி | வகுப்பறை மற்றும் ஆசிரியர்கள் அறையில் மறு வயரிங் மேற்கொள்ளும் பணி , கூரைத்தளத்தில் மறு தளஓடு அமைக்கும் பணி, வர்ணம்பூச்சு மற்றும் வடிகால் சுவர் மற்றும் மூடி அமைக்கும் பணி | 12.25 |
| 8 | தச்சநல்லூர் | 30 | கைலாசப்புரம் ஆரம்ப பள்ளி | தளஓடு , வர்ணம்பூச்சு, கைகிரில் பணி | 5.20 |
| 9 | தச்சநல்லூர் | 28 | பாரதியார்ஆரம்ப பள்ளி | போர்வெல் அமைக்கும்பணி, ஏற்கனவே உள்ள காம்பவுண்ட் சுவர் அகற்றி புதிய காம்பவுண்ட் சுவர், சமையலறை, மற்றும் ஸ்டோர் கட்டிடம் கட்டும் பணி | 12.65 |
| 10 | தச்சநல்லூர் | 10 | வெள்ள கோயில் ஆரம்ப பள்ளி | பள்ளி கட்டிடம் பராமரிக்கும் பணி, சயைலறை ஷெட் அமைக்கும் பணி, கழிப்பிடம், காம்பவுண்ட் சுவர் கட்டும் பணி , உணவருந்தும் அறையில் ஜி.ஐ.ஷீட் கூரை அமைக்கும் பணி | 17.25 |

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்டுள்ள விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சியில் கல்வி நிதி கீழ் மேற்காணும் பட்டியில் குறிப்பிட்டுள்ள மேலப்பாளையம், தச்சநல்லூர், திருநெல்வேலி மண்டத்தில் அமைந்துள்ள பள்ளி கட்டிடங்களின் நேரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**தீர்மானம் எண்: 95 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

6. திருநெல்வேலி மாநகராட்சியில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பு நாள் 07.05.2022ன்படி, இம்மாநகராட்சி பகுதியில் உள்ள அரசுபள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை மூன்று இடங்களில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் (Central Community Kitchen) அமைக்கும் செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண.17404/2022/MCA-2 நாள் 14.07.2022ல் தெரிவித்துள்ளதற்கிணங்கவும், அதன் வடிவமைப்பின்படியும் இம்மாநகராட்சியில், மேலவீரராகவபுரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி, மாநகராட்சி பாரதியார் மேல்நிலைப் பள்ளி, மற்றும் மேலப்பாளையம் மண்டல அலுவலக வளாக பின்புறம் ஆகிய மூன்று இடங்களிலும் ஒருங்கிணைந்த சமையற்கூடங்கள் தலா ரூ.34.10 இலட்சத்தில் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

மேற்கண்ட மூன்று ஒருங்கிணைந்த சமையற் கூடங்களின் விபரம் பின்வருமாறு:-

**<u>ஒருங்கிணைந்த சமையற் கூடம் 1 : (மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்கு பின்புறம்)</u>**

| வ. எண். | பள்ளியின் விபரம் | பள்ளி அமைந்துள்ள இடம் | பள்ளி குழந்தைகளின் எண்ணிக்கை | ஒருங்கிணைந்த சமையற் கூடத்தில் இருந்து பள்ளி அமைந்துள்ள தூரம் கிலோமீட்டரில் |
|---|---|---|---|---|
| 1 | குறிச்சி மாநகராட்சி ஆரம்ப பள்ளி | மேலப்பாளையம் | 100 | 7.80 |
| 2 | ஆசாத் மாநகராட்சி ஆரம்ப பள்ளி | மேலப்பாளையம் | 111 | 0.21 |
| 3 | கருங்குளம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி | மேலப்பாளையம் | 150 | 7.80 |
| 4 | ஹாமீம்புரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி | மேலப்பாளையம் | 480 | 1.20 |
| 5 | வடக்குப்படை மாநகராட்சி ஆரம்ப பள்ளி | பாளையங்கோட்டை | 23 | 5.00 |
| 6 | பெருமாள்புரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி | பெருமாள்புரம் | 71 | 4.70 |
| | மொத்தம் | | 935 | |

**ஒருங்கிணைந்த சமையற் கூடம் : 2 (மேல வீரராகவபுரம் மாநகராட்சி ஆரம்ப பள்ளி)**

| வ. எண். | பள்ளியின் விபரம் | பள்ளி அமைந்துள்ள இடம் | பள்ளி குழந்தைகளின் எண்ணிக்கை | ஒருங்கிணைந்த சமையற் கூடத்தில் இருந்து பள்ளி அமைந்துள்ள தூரம் கிலோமீட்டரில் |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சி பழைய ஆரம்ப பள்ளி, வண்ணார்பேட்டை | வண்ணார்பேட்டை | 17 | 3.50 |
| 2 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, கொக்கிரகுளம் | கொக்கிரகுளம | 56 | 3.00 |
| 3 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, ஏ.ஆர்.லைன். | பாளையங்கோட்டை | 32 | 6.70 |
| 4 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, குருந்துடையார்புரம். | குருந்துடையார்புரம் | 35 | 3.70 |
| 5 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, மேலவீரராகவபுரம். | மீனாட்சிபுரம் | 73 | 0 |
| 6 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, கைலாசபுரம் | கைலாசபுரம் | 52 | 1.20 |
| 7 | மாநகராட்சி அண்ணா ஆரம்ப பள்ளி | சி.என்.கிராமம் | 40 | 0.60 |
| 8 | ஸ்ரீரெங்கநாதன் மாநகராட்சி ஆரம்ப பள்ளி. | உடையார்பட்டி | 44 | 2.30 |
| | மொத்தம் | | 349 | |

**ஒருங்கிணைந்த சமையற் கூடம் : 3 (பாரதியார் ஆரம்ப பள்ளி)**

| வ. எண். | பள்ளியின் விபரம் | பள்ளி அமைந்துள்ள இடம் | பள்ளி குழந்தைகளின் எண்ணிக்கை | ஒருங்கிணைந்த சமையற் கூடத்தில் இருந்து பள்ளி அமைந்துள்ள தூரம் கிலோமீட்டரில் |
|---|---|---|---|---|
| 1 | கல்லணை மாநகராட்சி ஆரம்ப பள்ளி | திருநெல்வேலி டவுண் | 400 | 1.10 |
| 2 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, பாட்டபத்து | பாட்டபத்து | 92 | 3.30 |
| 3 | பாரதியார் ஆரம்ப பள்ளி | திருநெல்வேலி டவுண் | 38 | 0 |
| 4 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, லாலூகாபுரம் | லாலூகாபுரம | 61 | 1.70 |
| 5 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, மலையாளமேடு | மலையாளமேடு | 78 | 3.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, சிவன் கோவில் வார்டு | பேட்டை | 103 | 3.70 |
| 7 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, பழையபேட்டை | பழையபேட்டை | 170 | 3.30 |
| 8 | மாநகராட்சி ஆரம்ப பள்ளி, தர்மராஜா வார்டு | குற்றாலம் ரோடு | 20 | 1.50 |
| | மொத்தம் | | 962 | |

மேற்கண்டவாறு மூன்று இடங்களிலும் சமையற்கூடங்கள் (Central Community Kitchen) கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இம்மாநகராட்சி பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை அரசாணை (நிலை) எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை நாள் 27.07.2022 ல் தெரிவித்துள்ளபடி, மேற்படி மூன்று சமையல் கூடங்களில் இருந்து 22 மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 2246 மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி உணவினை வழங்குவதற்கு ஏதுவாக சமையல் பாத்திரங்கள், எரிவாயு சிலிண்டர், மற்றும் தேவையான உணவு பொருட்களுடன் காலை சிற்றுண்டி உணவினை தயார் செய்து மேற்படி 22 பள்ளிகளுக்கும் கொண்டு செல்வதற்கான வாகன வாடகை மற்றும் போக்குவரத்து கட்டணம் போன்ற இனப் பணிகளுக்கும் சேர்த்து மின்னணு மற்றும் மின்னணு முறையில்லாத முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

மேற்படி பணிக்கு 1.8.2022 முதல் ஒப்பந்த ஆவணம் (Bid Document) http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு 15.08.2022 முடிய பதிவிறக்கம் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 16.08.2022 அன்று மின்னணு முறையில் No Food Waste, Coimbatore நிறுவனத்திடம் இருந்து மட்டும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மின்னணு முறையில்லாத மூடி முத்திரையிடப்பட்ட இருஉறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. மேற்படி நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில், மேற்படி No Food Waste, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்ததினால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளி அட்டவணை 17.08.2022 அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

<table>
<tr><th>Sl. No.</th><th>Description</th><th>Rate per Packet in figure</th><th>In words</th></tr>
<tr><td>1</td><td>Average Cost of One Breakfast with 150 to 200 gms plus 60 ml of vegetable sambar including the cost of transportation to supply the food to the designated locations. The breakfast may be any one of the below indicated items and the same should be supplied as per the specification and recipe given by the authority.<br><br>
<table>
<tr><th>Day</th><th>Menu</th></tr>
<tr><td>Monday</td><td>Rava Uppuma + Vegetable sambar<br>Semiya Uppuma + Vegetable sambar<br>Rice Uppuma + Vegetable sambar<br>Wheat Uppuma + Vegetable sambar</td></tr>
<tr><td>Tuesday</td><td>Rava vegetable kitchadi<br>Vegetable semiya kitchadi<br>Vegetable sola kitchadi<br>Vegetable wheat Kitchadi</td></tr>
<tr><td>Wednesday</td><td>Rava pongal + Vegetable sambar<br>Venpongal + Vegetable sambar</td></tr>
<tr><td>Thursday</td><td>Semiya Uppuma + Vegetable sambar<br>Rice Uppuma + Vegetable sambar<br>Rava Uppuma + Vegetable sambar<br>Wheat Uppuma + Vegetable sambar</td></tr>
<tr><td>Friday</td><td>Any one kitchadi (as per Tuesday table Menu)<br>Rava Kesari<br>Semiya kesari</td></tr>
</table>
</td><td>Rs.12.65</td><td>Twelve Rupees and Sixty Five Paise</td></tr>
</table>

மேற்காணும் பட்டியலில் கண்டவாறு, மேற்படி No Food Waste, Coimbatore நிறுவனம் நாள் ஒன்றுக்கு ஒரு உணவு பொட்டலத்திற்கு ரூ.12.65 வீதம் அடிப்படையில் உணவு வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட விலைவிகிதத்தினை குறைத்து தரக் கோரி மேற்படி நிறுவனத்திற்கு 17.08.2022 அன்று கடிதம் (Negotiation Letter) அனுப்பப்பட்டது.

அதற்கு மேற்படி நிறுவனம் சமையல் பாத்திரங்கள், எரிவாயு சிலிண்டர், மற்றும் தேவையான உணவு பொருட்களுடன் காலை சிற்றுண்டி உணவினை தயார் செய்து மேற்படி 22 பள்ளிகளுக்கும் கொண்டு செல்வதற்கான வாகன வாடகை மற்றும் போக்குவரத்து கட்டணம்

ஆகியவற்றுக்கான விலை தற்போது கூடுதலாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளியில் இருந்து கொடுக்கப்பட்ட ஒரு உணவு பொட்டலம் ரூ.12.65 என்ற விலையில் இருந்து மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தனது 18.08.2022 -ம் தேதிய கடிதத்தில் இறுதியாக No Food Waste, Coimbatore நிறுவனம் மேற்படி தெரிவித்துள்ளது.

எனவே, 22.08.2022ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில், நாள் ஒன்றுக்கு ஒரு உணவு பொட்டலம் ரூ.12.65 என மேற்படி No Food Waste, Coimbatore நிறுவனம் கொடுக்கப்பட்ட விலைவிகிதத்தினை ஒப்புக்கொள்ளலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வதற்கு மாமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்ட விபரப்படி, இம்மாநகராட்சி பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை அரசாணை (நிலை) எண்.43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை நாள் 27.07.2022 ல் தெரிவித்துள்ளபடி, மேற்படி மூன்று சமையல் கூடங்களில் இருந்து 22 மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 2246 மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி உணவினை வழங்குவதற்கு ஏதுவாக சமையல் பாத்திரங்கள், எரிவாயு சிலிண்டர், மற்றும் தேவையான உணவு பொருட்களுடன் காலை சிற்றுண்டி உணவினை தயார் செய்து மேற்படி 22 பள்ளிகளுக்கும் கொண்டு செல்வதற்கான வாகன வாடகை மற்றும் போக்குவரத்து கட்டணம் போன்ற அனைத்து பணிகளையும் மேற்கொள்வதற்கு, வரப் பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான No Food Waste, Coimbatore நிறுவனம் விலைக்குறைப்பு பேச்சுவார்ததைக்கு பின் நாள் ஒன்றுக்கு ஒரு உணவு பொட்டலத்திற்கு ரூ.12.65 வீதம் வழங்க ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதினை ஒப்புக் கொள்ளலாம் என 22.08.2022ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம்.

(ந.க.எண்.இ1.3460/2022)

**தீர்மானம் எண்:96 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

7. திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை பேருந்து நிலைய பழைய கடைகட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக சீர்மிகு நகர

திட்டத்தின் (Smart City) கீழ் தரைதளத்தில்-14கடைகள் முதல் தளத்தில்-16 கடைகள் ஆக மொத்தம்-30 கடைகள் கட்டப்பட்டு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்ட கடைகளுக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கடைஎண் | குத்தகைதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | G-1 | C.செல்வகுமார் | ரூ.25500/- |
| 2 | G-4 | V.குமரேசன் | ரூ.20200/- |
| 3 | G-8 | V.சீனிப்பாண்டி | ரூ.30150/- |
| 4 | G-10 | S.M.கென்னடி | ரூ.10100/- |
| 5 | G-11 | S.பேராட்சி | ரூ.15150/- |
| 6 | G-24 | S.P.சாந்தி | ரூ.26100/- |
| 7 | G-31 | R.ஜெபக்குமார் | ரூ.18500/- |
| 8 | G-33 | G.அமுதா | ரூ.30200/- |

தரைதளத்திலுள்ள 14கடைகளில் 8 கடைகள் மட்டும் ஏலம் விடப்பட்டு மேற்கண்ட குத்தகைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கடைகள் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள தரைதளத்திலுள்ள 6 கடைகள் மற்றும் முதல் தளத்திலுள்ள 16 கடைகள் ஆக மொத்தம் 22 கடைகளுக்கு பிரதிவாரம் புதன்கிழமை தோறும் மறுஏலம் /ஒப்பந்தப்புள்ளிகோரியும் ஏலம் எடுக்கவரும் முன்வராதநிலையில் மாநகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும் மாநகராட்சிக்குவருவாய் ஈட்டும் நோக்கத்தினை கருத்தில் கொண்டும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகை, வைப்புத்தொகை, கூடுதல் வைப்புத்தொகை மற்றும் சால்வன்சி தொகை ஆகியவற்றை கீழ்க்கண்டவாறு மறுநிர்ணயம் செய்யலாம்.

**குறுமத்தொகைவிபரம்: (சதுர அடியில்)**

| கட்டிட விபரம் | 10.11.2021 இல் நிர்ணயம் செய்யப்பட்டது | 24.01.2022 இல் நிர்ணயம் செய்யப்பட்டது | 01.05.2022 இல் நிர்ணயம் செய்யப்பட்டது | தற்போது நிர்ணயிக்கப்பட வேண்டிய குறுமத்தொகை |
|---|---|---|---|---|
| தரைதளம் | ரூ.200/- | ரூ.175/- | ரூ.125/- | ரூ.100/- |
| முதல் தளம் | ரூ.150/- | ரூ.110/- | ரூ.75/- | ரூ.50/- |

**வைப்புத்தொகைவிபரம்:-**

| சதுரஅடிவிபரம் | 10.11.2021 (ரூபாய் இலட்சத்தில்) | 13.12.2021 (ரூபாய் இலட்சத்தில்) | தற்போது நிர்ணயிக்கப்பட வேண்டிய வைப்புத்தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 முதல் 200 சதுரஅடிவரை | ரூ.10.00 | ரூ.7.00 | ரூ.3.00 |
| 201 முதல் 500 சதுரஅடிவரை | ரூ.20.00 | ரூ.15.00 | ரூ.5.00 |
| 501 முதல் 800 சதுரஅடிவரை | ரூ.30.00 | ரூ.20.00 | ரூ.7.00 |
| 801 முதல் 1000 சதுரஅடிவரை | ரூ.40.00 | ரூ.25.00 | ரூ.9.00 |
| 1001 முதல் 1600 சதுரஅடிவரை | ரூ.50.00 | ரூ.30.00 | ரூ.10.00 |

**வைப்புத்தொகை, சால்வன்சி, கூடுதல் வைப்புத்தொகை, குறுமத் தொகை விபரம்:-**

**i) தரைதளம்:-**

| வ. எண். | தரைதள கடை எண் | கடையின் அளவு (சதுரஅடியில்) | ஏலமுன் வைப்புத் தொகைரூ. (லட்சத்தில்) | கொடுக்க வேண்டிய சால்வன்சி மதிப்பு ரூ. (லட்சத்தில்) | சால்வன்சி இல்லையேல் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புதொகை | குறுமத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | G2 | 113 | 10.00 | 20.00 | 10.00 | 11300 |
| 2 | G7 | 175 | 10.00 | 20.00 | 10.00 | 17500 |
| 3 | G14 | 168 | 10.00 | 20.00 | 10.00 | 16800 |
| 4 | G15 | 99 | 10.00 | 20.00 | 10.00 | 9900 |
| 5 | G18 | 310 | 20.00 | 40.00 | 20.00 | 31000 |
| 6 | G32 | 139 | 10.00 | 20.00 | 10.00 | 13900 |
| Total | | 1004 | 70.00 | 140.00 | 70.00 | 100400 |

**ii) முதல் தளம்:-**

| வ .எண். | முதல் தளகடைஎண் | கடையின் அளவு (சதுர அடியில்) | ஏலமுன் வைப்புத் தொகை ரூ. (லட்சத்தில்) | கொடுக்க வேண்டிய சால்வன்சி மதிப்பு ரூ. (லட்சத்தில்) | சால்வன்சி இல்லை யேல் செலுத்த வேண்டிய கூடுதல்வைப்பு தொகை (லட்சத்தில்) | குறுமத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | F1 | 373 | 5.00 | 10.00 | 5.00 | 18700 |
| 2 | F2 | 332 | 5.00 | 10.00 | 5.00 | 16600 |
| 3 | F3 | 221 | 5.00 | 10.00 | 5.00 | 11100 |
| 4 | F7 | 347 | 5.00 | 10.00 | 5.00 | 17400 |
| 5 | F8 | 1107 | 10.00 | 20.00 | 10.00 | 55400 |
| 6 | F10 | 306 | 5.00 | 10.00 | 5.00 | 15300 |
| 7 | F11 | 316 | 5.00 | 10.00 | 5.00 | 15800 |
| 8 | F12 | 1158 | 10.00 | 20.00 | 10.00 | 57900 |
| 9 | F13 | 1598 | 10.00 | 20.00 | 10.00 | 79900 |
| 10 | F14 | 678 | 7.00 | 14.00 | 7.00 | 33900 |
| 11 | F15 | 345 | 5.00 | 10.00 | 5.00 | 17300 |
| 12 | F16 | 338 | 5.00 | 10.00 | 5.00 | 16900 |
| 13 | F17 | 302 | 5.00 | 10.00 | 5.00 | 15100 |
| 14 | F20 | 558 | 7.00 | 14.00 | 7.00 | 27900 |
| 15 | F21 | 247 | 5.00 | 10.00 | 5.00 | 12400 |
| 16 | F23 Restaurent | 1419 | 10.00 | 20.00 | 10.00 | 71000 |
| Total | | 9645 | 104.00 | 208.00 | 104.00 | 482600 |

**அலுவலகக்குறிப்பு:-**

பொருளில் கண்டவாறு புதியதாக கட்டப்பட்ட பாளை பேருந்து நிலைய கடைகளுக்கு மேற்க்கண்டவாறு வைப்புத்தொகை, சால்வன்சி மதிப்பு, கூடுதல் வைப்புத் தொகை, குறுமத்தொகை ஆகியவற்றை குறைத்து மறுநிர்ணயம் செய்வது குறித்து மாமன்றம் முடிவுசெய்யலாம்.

ந.க.எண்.அ1/3990/2021

## தீர்மானம் எண்: 97 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், புதிய வார்டு எண் 18 பேட்டை சுத்தமல்லி கிராமம் காந்திநகர் நியூ காலனியில் அமைந்துள்ள அருள்மிகு தங்கசுடலை ஆண்டவர் திருக்கோவில் மின் இணைப்பு வழங்க ஊர்பொதுமக்கள் கேட்டுள்ளார். மனுதாரர் கோரப்பட்ட மனுவில் உள்ள இடத்தில் கோவில் மட்டுமே இருப்பதால் வரிவிதிப்பு செய்ய இயலாத நிலையில் மேற்படி கோவிலுக்கு மின்சாரம் இணைப்பு வழங்கும் பொருட்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டப்பிரிவு : 123/1994 - பகுதி -**(a)** - ல் காணும் வழிகாட்டுதல்களின்படி மேற்படி அருள்மிகு தங்கசுடலை ஆண்டவர் திருக்கோவிலுக்கு சொத்துவரிவிதிப்பில் இருந்து விலக்கு அளிப்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு :**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றும், திருநெல்வேலி மாநகராட்சி சட்டப்பிரிவு : 123/1994-ல் காணும் வழிகாட்டுதல்களின்படியும் பொதுமக்களின் நலன் கருதி புதிய வார்டு எண் 18 பேட்டை சுத்தமல்லி கிராமம் காந்திநகர் நியூ காலனியில் அமைந்துள்ள அருள்மிகு தங்கசுடலை ஆண்டவர் திருக்கோவிலுக்கு மின் இணைப்பு வழங்கும் பொருட்டு மேற்படி கோவிலுக்கு சொத்துவரிவிதிப்பில் இருந்து விலக்கு அளிக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்

(அ3/687/2022)( திருநெல்வேலி வார்டு)

## <u>தீர்மானம் எண்: 98 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</u>

---

9. திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டம்-2ன் கீழ் 3 பொதுக்கழிப்பிடங்கள், 4 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 4 சிறுநீர் கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண.2990/2022/SBM நாள் 11.04.2022ல் ரூ.215.36 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்படடுள்ளது. அதன்படி திருநெல்வேலி மண்டலம் காட்சிமண்டபம் பகுதியில் ரூ.24.71 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக் கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 18/2022-23-ன் படி மாவட்ட அளவில் 07.07.2022-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி 14.07.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் திருமதி.அமராவதி என்பவரிடம் இருந்து மட்டும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அன்னாரது விலை அட்டவணையானது 15.07.2022-ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | திருமதி. அமராவதி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மண்டலப் பகுதிக்குட்பட்ட காட்சிமண்டபம் பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைத்தல். | ரூ. 24,43,706/- | ரூ. 23,63,286/- |
| | | | 3.29% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திருமதி.அமராவதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 3.29% (ஒப்பந்த மதிப்பு ரூ.23,63,286/-) குறைவாக உள்ளது. எனவே, 20.07.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுக் கூட்டத்தில், மேற்படி பணியானது தூய்மை இந்தியா இயக்கத் திட்டம்-2ன் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 3.29% குறைவான விலைவிகிதத்தில் (ஒப்பந்த மதிப்பு ரூ.23,63,286/-) ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.அமராவதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டம்-2ன் கீழ், திருநெல்வேலி மண்டலப் பகுதிக்குட்பட்ட காட்சிமண்டபம் பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணியினை ரூ.24.71 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 20.07.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளின்படி, 2வது அழைப்பில் வரப்பெற்ற மதிப்பீட்டை விட 3.29% குறைவான ஒப்பந்தப்புள்ளி (ஒப்பந்த மதிப்பு ரூ.23,63,286/-) கொடுத்துள்ள திருமதி.அமராவதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி, மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 99 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

10. திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின்-2ன் கீழ் 3 பொதுக்கழிப்பிடங்கள், 4 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 4 சிறுநீர் கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண.2990/2022/SBM நாள் 11.04.2022ல் ரூ.215.36 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்படடுள்ளது. அதன்படி

பாளையங்கோட்டை மண்டலம் கக்கன் நகர் பகுதியில் ரூ.24.71 இலட்சம் மதிப்பீட்டில் பொது கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 18/2022-23-ன் படி மாவட்ட அளவில் 07.07.2022-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி 14.07.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் திரு.ஐ.கணபதி என்பவரிடம் இருந்து மட்டும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அன்னாரது விலை அட்டவணையானது 15.07.2022-ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | திரு.ஐ.கணபதி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மண்டலப் பகுதிக்குட்பட்ட கக்கன் நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைத்தல். | ரூ. 24,43,706/- | ரூ. 24,31,475/- |
| | | | 0.50% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.ஐ.கணபதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.50% (ஒப்பந்த மதிப்பு ரூ.24,31,475/-) குறைவாக உள்ளது. எனவே, 20.07.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுக் கூட்டத்தில், மேற்படி பணியானது தூய்மை இந்தியா இயக்கத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.50% குறைவான விலைவிகிதத்தில் (ஒப்பந்த மதிப்பு ரூ.24,31,475/-) ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஐ.கணபதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ், பாளையங்கோட்டை மண்டலப் பகுதிக்குட்பட்ட கக்கன் நகரில் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணியினை ரூ.24.71 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 20.07.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளின்படி, 2வது அழைப்பில் வரப்பெற்ற மதிப்பீட்டை விட 0.50% குறைவான ஒப்பந்தப்புள்ளி (ஒப்பந்த மதிப்பு ரூ.24,31,475/-) கொடுத்துள்ள திரு.ஐ.கணபதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம் என

பரிந்துரை செய்துள்ளதின்படி, மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 100 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

11. திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் வி.எம்.சத்திரம் கிராமம், சர்வே எண் 142/3பாகம், வி.எம்.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 9-ல் அமையும் A-A.18மீ அகல திட்ட சாலை நீக்கம் செய்ய கோரிய மனுதாரர் திரு.R.தனுஷ்கோடி ஆதித்தன் விண்ணப்பத்திற்கு உள்ளாட்சி தீர்மானம் பரிந்துறை கூராய்வு கட்டணம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்குமாறு இணை இயக்குநர், திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ஒ.மு.க.எண் 250/2022 திலிமா3 நாள் 20.01.2022-ல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் திருநெல்வேலி மாநகராட்சி வி.எம்.சத்திரம் கிராமம், சர்வே எண் 142/3பாகம் வி.எம்.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்:9-ல் அமையும் A-A 18மீ அகல திட்டச்சாலையினை நீக்கம் செய்து மனுதாரர் மனைக்கு அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

மனுதாரர் மனைகள் 95 முதல் 102வரையுள்ள மனைகளானது வி.எம்.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்: 9-ல் A-A என அறிவிக்கப்பட்டுள்ள 18மீட்டர் திட்டச்சாலையின் ஊடே அமைந்துள்ளதால் உள்ளூர் திட்டகுழுமத்தில் Soldout Plot frame work 436/2018 என எண்ணிட்டு மேற்படி திட்டசாலை ஊடே அமைந்துள்ள மனைகளை வரன்முறை படுத்தக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டச்சாலையானது அணுகுசாலையாக கொண்டு திட்ட எண் 9-ல் Community Centre என அறிவிக்கப்பட்ட பகுதியினை அனுமதியற்ற மனை வரன்முறை திட்டத்தின் கீழ் மனைப்பிரிவு வரன்முறை செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், உத்தேச திட்டச்சாலையில் ஏற்கனவே குடியிருப்பு கட்டிடங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளதாலும் ஏற்கனவே மேற்படி குடியிருப்புகளுக்கு அருகில் மாநகராட்சி சாலை அமைந்துள்ளதாலும் மனுதாரர் மனைகளுக்கு அணுகுசாலை உள்ளதாலும் 18மீட்டர் அகல A-A திட்டச்சாலை அமைய வாய்ப்பில்லை என்பதனை கருத்தில் கொண்டு மேற்கண்ட 95 முதல் 102வரையுள்ள மனைகளில் அமையும் திட்டசாலையினை நீக்கம் செய்து நில உபயோக மாற்றம் செய்து குடியிருப்பு மனைகளாக வரன்முறை செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்டுள்ளவாறு, மேற்கண்ட திட்டச்சாலையானது அணுகுசாலையாக கொண்டு திட்ட எண் 9-ல் Community Centre என அறிவிக்கப்பட்ட பகுதியினை அனுமதியற்ற மனை வரன்முறை திட்டத்தின் கீழ் மனைப்பிரிவு வரன்முறை செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், உத்தேச திட்டச்சாலையில் ஏற்கனவே குடியிருப்பு கட்டிடங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளதாலும் மனுதாரர் மனைகளுக்கு ஏற்கனவே மாநகராட்சி தார் சாலை அணுகுசாலையாக உள்ளதாலும், மேற்படி உத்தேச 18மீட்டர் அகல A-A திட்டச்சாலை அமைய வாய்ப்பில்லை என்பதாலும், மேற்கண்ட 95 முதல் 102வரையுள்ள மனைகளில் அமையும் திட்டசாலையினை நீக்கம் மற்றும் நில உபயோக மாற்றம் செய்து குடியிருப்பு மனைகளாக வரன்முறை செய்வது குறித்து மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 101 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

12. திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற தொடர்புடைய வழக்குகளை நடத்துவதற்கு திருநெல்வேலி வழக்கறிஞர்கள் சங்கத்தில் (Tirunelveli Bar Association) பதிவு பெற்று வழக்கறிஞர் தொழிலில் 10 வருட அனுபவமுள்ள வழக்கறிஞர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டது. அதில் கீழ்க்கண்ட வழக்கறிஞர்கள் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்ற வழக்குகளை மாநகராட்சி சார்பாக நடத்துவதற்கு விண்ணப்பம் அளித்துள்ளனர்.

1. திரு.க.மகாராஜன், த.பெ. கணபதி M.S. No. 1649/2006
2. திரு.த.சண்முகஜெகன், த.பெ.தர்மராஜ் M.S. No. 670/2008
3. திரு.ஆ.சுப்பிரமணியன், த.பெ. ஆறுமுகநயினார் M.S. No. 2116/2011
4. திரு.பா.மாரியப்ப காந்தி, த.பெ.பாதாளம் M.S. No. 1376/2000
5. திரு.முகைதீன் என்ற எம்.எம்.தீன், த.பெ.மொகைதீன்பிச்சை M.S. No. 19/1990
6. திரு.ரா.சங்கர், த.பெ.ராமகிருஷ்ணன், M.S. No. 156/1997

மேற்கண்ட ஆறு வழக்கறிஞர்களையும் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றம், சார்பு மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களில் மாநகராட்சி தொடர்பாக தாக்கல் செய்யப்படும் உரிமையியல், குற்றவியல் சம்மந்தமான வழக்குகள், மேல்முறையீடு மற்றும் வரிவிதிப்பு மேல்முறையீடு தீர்வாய வழக்குகள் உள்ளிட்ட அனைத்து வழக்குகளையும் , மாநகராட்சி சார்பில் வழக்காடும் வகைக்கு மாநகராட்சி நடைமுறை நூல் ஆர்ட்டிக்கிள் 55.5.ல் கண்டுள்ளவாறு மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கவும் மேற்படி வழக்கறிஞர்களுக்கு அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வழக்குக்கட்டணம் வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

மாநகராட்சிக்குப் பொருந்தும் நகராட்சிகளின் நடைமுறை நூல் ஆர்டிக்கல் (Article) 55-5 ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றியும் திருநெல்வேலி வழக்கறிஞர்கள் சங்கத்தில் பதிவு பெற்று வழக்கறிஞர் பணியில் 10 வருட அனுபவம் பெற்றுள்ள கீழ்க்கண்ட வழக்கறிஞர்களை

1. திரு.க.மகாராஜன், த.பெ. கணபதி M.S. No. 1649/2006
2. திரு.த.சண்முகஜெகன், த.பெ.தர்மராஜ் M.S. No. 670/2008
3. திரு.ஆ.சுப்பிரமணியன், த.பெ. ஆறுமுகநயினார் M.S. No. 2116/2011
4. திரு.பா.மாரியப்ப காந்தி, த.பெ.பாதாளம் M.S. No. 1376/2000
5. திரு.முகைதீன் என்ற எம்.எம்.தீன், த.பெ.மொகைதீன்பிச்சை M.S. No. 19/1990
6. திரு.ரா.சங்கர், த.பெ.ராமகிருஷ்ணன், M.S. No. 156/1997

திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றம், சார்பு மற்றும் உரிமையியல் நீதிமன்றங்களில் மாநகராட்சி தொடர்பாக தாக்கல் செய்யப்படும் உரிமையியல், குற்றவியல் சம்மந்தமான வழக்குகள், மேல்முறையீடு மற்றும் வரிவிதிப்பு மேல்முறையீடு தீர்வாய வழக்குகள் உள்ளிட்ட அனைத்து வழக்குகளையும் , மாநகராட்சி சார்பில் வழக்காடும் வகைக்கு மாநகராட்சி தொடர்பான வழக்குகளை நடத்திட ஏதுவாக மூன்றாண்டு காலத்திற்கு நியமிக்கவும், அரசினரால் அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படும் வழக்குக்கட்டணம் வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நியமனம் செய்தமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: சி1/5634/2021 மைய அலுவலகம்

**தீர்மானம் எண்: 102 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

13. தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.07.2022 முதல் 34 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை எண்:

254 நிதித் (படிகள்) துறை நாள்: 18.08.2022 மற்றும் அரசாணை எண்: 257 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள்: 18.08.2022 ஆகியவை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

## அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண். சி3/4215/2022 (மைய அலுவலகம்)

**தீர்மானம் எண்: 103 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

---

14. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாத சிறிய மேல்நிலைத் தொட்டிகளை (Mini OHT) இடித்து அப்புறப்படுத்துவதற்கு மேலப்பாளையம் வார்டு குழுக்கூட்டம் நாள்:25.04.2022 அன்று நடைபெற்ற வார்டு குழு கூட்ட தீர்மானத்தின்படி கீழ்க்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பயன்படாத சிறிய மேல்நிலைத் தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்தும்படி மாமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை அங்கீகரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இடித்து அப்புறப்படுத்த வேண்டிய சிறிய மேல்நிலைத் தொட்டிகளின் விபரம் வருமாறு.

| வரிசை எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | எண்ணம் | வார்டு குழு கூட்ட தீர்மானம் எண்:7,8,10,12. நாள்:25.04.2022. |
|---|---|---|---|---|
| 1 | 44 | வெள்ளகலிப்பா தெரு | 1 தொட்டி | - |
| 2 | 44 | செக்கடி தெரு | 1 தொட்டி | - |
| 3 | 45 | மோத்தை மீராத் தெரு | 3 தொட்டி | 7, 25.04.2022. |
| 4 | 45 | ஜமாலியா தைக்க தெரு | 1 தொட்டி | 7, 25.04.2022. |
| 5 | 45 | கல்வத் நாயகம் தெரு | 1 தொட்டி | 7, 25.04.2022. |
| 6 | 45 | ஆண்டவர் 1வது தெரு | 1 தொட்டி | 7, 25.04.2022. |
| 7 | 46 | ஹஸ்ரத் பிலால் தெரு தெற்குப் பகுதி | 1 தொட்டி | 8, 25.04.2022. |
| 8 | 46 | சுமாயினா காதர் மீத்தீன் மூப்பன் தெரு தெற்குப் பகுதி | 1 தொட்டி | 8, 25.04.2022. |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 47 | முகைதீன் ஆண்டவர் தெரு | 1 தொட்டி | - |
| 10 | 47 | பூலி புதுத் தெரு | 1 தொட்டி | - |
| 11 | 47 | பசிரப்பா தெரு | 2 தொட்டி | - |
| 12 | 47 | பெரிய கொத்துபா பள்ளிவாசல் தெரு | 1 தொட்டி | - |
| 13 | 47 | ஆசுரா மேலத் தெரு | 1 தொட்டி | - |
| 14 | 47 | சப்பாணி ஆலிம் மேலத்தெரு | 1 தொட்டி | - |
| 15 | 47 | தெற்கு தைக்கா தெரு | 1 தொட்டி | - |
| 16 | 48 | அக்பர் தெரு | 1 தொட்டி | 10, 25.04.2022. |
| 17 | 48 | சாயன் தரகன் தெரு | 2 தொட்டி | 10, 25.04.2022. |
| 18 | 48 | அசன் தரகன் தெரு | 1 தொட்டி | 10, 25.04.2022. |
| 19 | 48 | கலுங்கு சின்ன மீத்தீன் தெரு | 1 தொட்டி | 10, 25.04.2022. |
| 20 | 49 | சப்பாணி ஆலிம் கீழத் தெரு | 2 தொட்டி | - |
| 21 | 49 | ராவுத்தர் தெரு | 1 தொட்டி | - |
| 22 | 49 | பரக்கத் நகர் 1வது தெரு | 1 தொட்டி | - |
| 23 | 49 | கணேசபுரம் தெற்கு தெரு | 1 தொட்டி | - |
| 24 | 49 | ஆசுரான் தெரு | 1 தொட்டி | - |
| 25 | 50 | ஹாமீம்புரம் 5வது தெரு மேற்கு பகுதி | 1 தொட்டி | 12, 25.04.2022. |
| 26 | 50 | சித்திக் நகர் 3வது தெரு நடுபகுதி | 1 தொட்டி | 12, 25.04.2022. |
| 27 | 52 | ராஜா நகர் 3வது தெரு | 1 தொட்டி | - |

மேற்கண்ட பொதுமக்களுக்கு பயன்படாத உபயோகமற்ற சிறிய மேல்நிலைத் தொட்டிகளை (Mini OHT) இடித்து அப்புறப்படுத்திவிட்டால், தெருக்களை அகலப்படுத்தி போக்குவரத்துற்கு இடையூறு ஏற்படுவது தடைபடும். மேலும் TANGEDCO நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டனம் மாநகராட்சிக்கு சேமிப்பாகும். எனவே மேற்படி Mini OHT-களை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.0.58 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதிக்கும் பொது நிதியின்கீழ் பணிகள் மேற்கொள்ளும் வகைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

மேலே பொருளில் காணும் விவரப்படி மேலப்பாளையம் மண்டலப் பகுதிகளில் பொதுமக்களுக்கு பயன்படாத பழுதடைந்த சிறிய மேல்நிலைத் தொட்டிகளை இடித்து அப்புறப்படுத்துவதற்கும் மற்றும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூபாய் 0.58 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ம.எண்: 68/2022-23)

## தீர்மானம் எண்: 104 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

15. திருநெல்வேலி மாநகராட்சியில் தேசிய நகர்புற சுகாதார இயக்க திட்டத்தின் கீழ கீழக்காணும் இடங்களில் நகர்ப்புற சுகாதார வளாகங்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு, தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6227/NUHM/SHS2021 dated 29.10.2021ன்படி, இம்மாநகராட்சிப் பகுதியில் பழைய (1)வார்டு எண்.50 அம்பேத்கார்நகர், (2)வார்டு எண்.55 பாறையடி, (3)வார்டு எண்.44 தடிவீரன் கோவில் கீழத் தெரு பூங்கா, (4)வார்டு எண்.42 தெற்கு மவுண்ட் ரோடு, (5)வார்டு எண்.4 மேகலிங்கபுரம், (6)வார்டு எண்.38 மேலநத்தம் கன்னி விநாயகர் கோவில் தெரு, (7) வார்டு எண்.11 திருவண்ணாதபுரம், (8)வார்டு எண்.13 மேரி ஆர்டன் பள்ளி எதிர்புறம்,(9) வார்டு எண்.18 ஆரோக்கியநாதபுரம் சமுதாயக் கூடம் அருகில், (10) வார்டு எண்.21 சமுதாய கூடம் சமாதானபுரம் அருகில் (11) வார்டு எண்.47 அசோகர் தெரு, (12)வார்டுஎண்.48 எம்.ஜி.ஆர்.நகர், (13) வார்டு எண்.19 இராஜகோபாலபுரம், (14)திருமால்நகர், (15) வார்டு எண்.17 வி.மு.சத்திரம் பூங்கா அருகில் (பகுதி-1) (16) வார்டு எண்.16 சமுதாய நலக்கூடம் அருகில், (17)வார்டு எண்.26 ஜெபாநகர், (18) வார்டு எண்.34 பீடி தொழிலாளர் காலனி ஆகிய இடங்களில் நகர்ப்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்கள் தலா ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கீழ்க்கண்ட இடங்களில் பணிகள் துவங்கப்படும் போது ஒரு சில இடங்களில் மேற்படி சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்களை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், வாகனங்கள் எதுவும் செல்ல முடியாமல் மிகவும் குறுகலாக இருப்பதாலும், அப்பகுதியில் சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்கள் கட்டும் பணியினை கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு மாற்று இடங்களில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | மண்டலம் | ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ள இட விபரம் | மாற்று இடம் தேர்வு செய்யப்பட்ட விபரம் | மாற்று இடம் தேர்வு செய்வதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | | பழைய வார்டு எண்.17 வி.மு.சத்திரம் பூங்கா நிலை-1 | புதிய வார்டு எண்.37 முத்தமிழ்நகர். தமிழ்நாடு வீட்டு வசதிவாரியம் நிலை-3 மேல்நிலை நீர்த் தேக்கத் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொட்டி அருகில் | |
| 2 | பாளை. | பழைய வார்டு எண்.16 சமுதாய நலக்கூடம் அருகில் | புதிய வார்டு எண்.6 சாந்திநகர் 30வது தெரு நியாயவிலைக்கடைக்கு மேல்புறம். | பொதுமக்கள் இடம் சம்பந்தமாக ஆட்சேபனை செய்ததின் காரணமாக |
| 3 | | பழைய வார்டு எண்.18 ஆரோக்கியநாதபுரம் சமுதாயநலக்கூடம் அருகில். | புதிய வார்டு எண்.38 ஆரோக்கியநாதபுரம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு தென்புறம். | |
| 4 | திருநெல்வேலி | வார்டு எண்.44 தடிவீரன் கோவில் கீழத் தெரு பூங்கா | வார்டு எண்.28 வையாபுரிநகர் | தேர்வு செய்யப்பட்ட இடம் வாகனங்கள் ஏதும் செல்லமுடியாத அளவில் குறுகலாக உள்ளதால், கட்டிடம் கட்டுவதற்கு தகுதியான இடமாக இல்லாமல் இருப்பதின் காரணமாக. |
| 5 | | எம்.ஜி.ஆர்.நகர் | மலையாளமேடு மாநகராட்சி சமுதாயக் கூடம் அருகில் | பொதுமக்களின் நலன்கருதி |
| 6 | | அசோகா தெரு | சாஸ்திரிநகர் அம்மன் கோவில் மேற்கு பகுதி | |
| 7 | | பாறையடி | திருநெல்வேலி டவுண் அடைக்கல மாதா கோவில் தெரு. (அடைக்கால மாதா பள்ளி அருகில், மாநகராட்சி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அருகில் | பொதுமக்களின் நலன் கருதி |
| 8 | மேலப்பாளையம் | வார்டு எண்.26 ஜெபாநகர் | வார்டு எண்.46 சமாயினா காதர் மூப்பன் தெரு | ஜெபாநகர் பகுதியில் மக்கள் நெருக்கம் அதிகம் இல்லாமல் இருப்பதால். |
| 9 | தச்சநல்லூர் | பழைய வார்டு எண்.4 புதிய வார்டு எண்.12 மேகலிங்கபுரம் சாலை தெரு | பழைய வார்டு எண்.4 புதிய வார்டு எண்.12 உடையார்பட்டி சாலைத் தெரு மாநகராட்சி ரெங்கநாதன் துவக்கப்பள்ளி வளாகம். | பணித்தளத்தில் இடம் பற்றாக்குறையாக இருப்பதின் காரணமாக. |

மேற்காணும் பட்டியலில் குறிப்பிட்டவாறு , தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத் திட்டத்தின் கீழ் சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்களை இடப்பிரச்சனை காரணமாகவும், பொதுமக்கள் நலன் கருதி, மாற்று இடங்களில் சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்களை கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்களை கட்டுவதற்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி இடங்களில்

இடப்பிரச்சனை காரணமாகவும், பொதுமக்கள் நலன் கருதியும் மாற்று இடங்கள் மாநகர நல அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட வார்டு அலுவலக பொறியாளர்களால் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்காணும் அட்டவணையில் கலம் எண்.5ல் குறிப்பிட்ட இடங்களில் சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்களை கட்டுவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(எச்.3/5425/2022)

**தீர்மானம் எண்:105 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

16. திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றியதில் அதிகமான சாலை உடைப்புகள் ஏற்பட்டமையாலும் மற்றும் மழையினால் சாலைகள் மிகவும் சேதமடைந்தமையாலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, 30 எண்ணம் பழுதடைந்த தார்ச்சாலைகளை 21.398 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.1500.08 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு மாமன்ற தீர்மான எண் 52 நாள் 8.6.2020ன் படி தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP- Tamil Nadu Sustainable Urban Development Project) சாலைகளை மேம்படுத்துவதற்கு பழுதடைந்த தார்ச்சாலைகளை சீரமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் சில இடங்களில் முடிவடையாமல் நடந்து கொண்டு இருப்பதினால், அச்சாலைகளுக்கு பதிலாக தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP- Tamil Nadu Sustainable Urban Development Project) -ன் கீழ்கண்ட பட்டியலில் உள்ள சாலைகளை மாற்று சாலையாக பணிகளை மேற்கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | பணியின் விபரம் |
|---|---|
| 1 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 26 தெற்கு மவுண்ட் சாலை |
| 2 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 23 காட்சி மண்டபம் முதல் பிள்ளையார் கோவில் வரை |
| 3 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 17 பேட்டை மற்றும் பழைய பேட்டை அணுகு சாலை, |
| 4 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 17 சர்தார்புரம் சாலை |
| 5 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 17 சரோஜினி சாலை |
| 6 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 25 சத்தியமூர்த்தி தெரு |
| 7 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 19 ஆதாம் நகா |
| 8 | திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 16 அரசன் நகா |
| 9 | தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 26 பாதாளத் திட்டப் பணி முடிவடைந்த பகுதகளான அம்மன் சன்னதி தெரு பகுதி முழுவதும் |
| 10 | தச்சநல்லூர் மண்டலம வார்டு எண் 30 சந்துபூந்துறை சாலை தெரு, |
| 11 | வார்டு எண் 39 பாளயங்கோட்டை மண்டலம் இரயில்வே பீடர் சாலை மற்றும் |

| | |
|---|---|
| | வி.எம்.எஸ்.மஹால் சாலை |
| 12 | மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 52 மேலப்பாளையம் சந்தை ரவுண்டானா முதல் ரெட்டியார்பட்டி சாலை வரை |
| | **மொத்தம்** |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த தார்ச்சாலைகளை, தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP- Tamil Nadu Sustainable Urban Development Project) சாலைகளை மேம்படுத்துவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் சில இடங்களில் முடிவடையாமல் நடந்து கொண்டு இருப்பதினால், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உறுதி செய்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP- Tamil Nadu Sustainable Urban Development Project) மேற்காணும் பட்டியலில் உள்ள சாலைகளை மாற்று சாலையாக நிறைவேற்றி கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் இ1/2716/2020

## தீர்மானம் எண்:106 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

17. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூா ்மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 1ல் தச்சநல்லூர் டவுண் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் வடக்குபகுதியில் உள்ள இரண்டு வகுப்பறைகட்டிடங்களின் மேற்கூரைபழுதடைந்துபூச்சுக்கள் கீழேவிழுகின்றன. மேலும் கான்கிரீட் கம்பிகள் தெரிகின்றது. மேற்படி பள்ளியை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் நேராய்வு செய்த போது பழுதடைந்து இரண்டு வகுப்பறை கட்டிடங்களின் மேற்கூரையை இடித்து விட்டுபுதிதாக R.C.C. கூரை அமைப்பதற்கும் மற்றும் மற்ற கட்டிடங்களை மராமத்து செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படிபள்ளியில் பழுதடைந்து இரண்டு வகுப்பறை கட்டிடங்களின் மேற்கூரையை இடித்து விட்டு புதிதாக R.C.C. கூரை அமைப்பதற்கும் மற்றும் அருகாமையில் உள்ள இதர கட்டிடங்களை மராமத்து செய்யவும் மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் அனுமதிக்கு.

**அலுவலககுறிப்பு:**

1) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 1ல் தச்சநல்லூர் டவுண் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் வடக்கு பகுதியில் உள்ள இரண்டு வகுப்பறை கட்டிடங்களின் மேற்கூரை பழுதடைந்து பூச்சுக்கள் கீழேவிழுகின்றன. மேலும் கான்கிரீட் கம்பிகள் தெரிகின்றது. மேற்படிபள்ளியை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் நேராய்வு செய்தபோது பழுதடைந்து இரண்டு வகுப்பறை கட்டிடங்களின் மேற்கூரையை இடித்து விட்டுபுதிதாக R.C.C. கூரை அமைப்பதற்கும் மற்றும் மற்ற கட்டிடங்களை மராமத்துசெய்யவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படிபள்ளியில் பழுதடைந்துள்ள இரண்டு வகுப்பறை கட்டிடங்களின் மேற்கூரையை இடித்து விட்டு புதிதாக

R.C.C. கூரை அமைப்பதற்கும் மற்றும் அருகாமையில் உள்ள இதர கட்டிடங்களை மராமத்து செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பழுதடைந்து இரண்டு வகுப்பறை கட்டிடங்களின் மேற்கூரையை இடித்து விட்டு புதிதாக R.C.C. கூரைஅமைப்பதற்கும் மற்றும் மற்ற கட்டிடங்களை மராமத்து செய்யவும் ஆகும் செலவுத்தொகை **ரூ.30.00/-**லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 107 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

18. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், 14வது வார்டுக்கு உட்பட்ட ஊருடையான் குடியிருப்பு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் சுமார் 88 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். மேற்படிபள்ளியில் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்புவரை செயல்பட்டு வருகின்றது. மேலும் மேற்படி பள்ளியில் மாணவ,மாணவியர்கள் அமர்ந்து படிக்கபோதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மாமன்றம் ஒப்புதல் பெற்று மேற்படி பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் R.C.C. கூரையுடன் கட்டுவதற்கு அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலககுறிப்பு:**

1) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், 14வது வார்டுக்கு உட்பட்ட ஊருடையான் குடியிருப்பு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் சுமார் 88 மாணவ,மாணவியர்கள் பயின்று வருகின்றனர். மேற்படிபள்ளியில் 1ம் வகுப்புமுதல் 8ம் வகுப்புவரை செயல்பட்டு வருகின்றது. மேலும் மேற்படி பள்ளியில் மாணவ, மாணவியர்கள் அமர்ந்து படிக்க போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மாமன்றம் ஒப்புதல் பெற்று மேற்படி பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் R.C.C. கூரையுடன் கட்டுவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பள்ளியில் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் R.C.C. கூரையுடன் கட்டுவதற்கு ஆகும் செலவுத்தொகை **ரூ.31.00/-**லட்சத்திற்கு நிர்வாக அனுமதிவழங்கலாம்.

## தீர்மானம் எண்: 108 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---